*2021 பிப்ரவரி 5]*
*கலைவாணர் அரங்கத்தின் முதல் தளத்தில் உள்ள சட்டமுன்வடிவு–1 பிரிவில் வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) இந்திய தண்டனைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2021 ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

*மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*